**SC 73/2020 Date 03.01.2023, அசா1 சண்முகவேல் மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 6 மற்றும் 8 முதல் 11 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் தற்போது ராஜேந்திரம் கிராமத்தில் கிராமநிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். பொதுவாக கிராமநிர்வாக அலுவலர்கள் பணிபுரியும் கிராமத்தில் வசிக்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் பிரேதத்தை பார்ப்பதற்கு எத்தனை மணி நேரத்திற்கு முன்பு சம்பவம் நடந்திருக்கும் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. நான் பார்க்கும்போது இரத்தம் உறைந்து இருந்தது. முதல்நாளே அவர் இறந்திருப்பார் என்றால் அதுபற்றி என்னால் சொல்ல முடியாது. நான் பார்க்கும்போது இறந்தவரின் ஆடைகளில் இரத்தம் இருந்தது. நான் என்னுடைய அலுவலகத்திற்கு சென்று என் உதவியாளரைவிட்டு சாட்சிகளை அழைத்து வரச்சொன்னேன் என்றால் அப்படி இல்லை. சாட்சிகள் மதியழகன், கலைவாணன் ஆகியோர் நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது அங்கே இருந்தார்களா என்றால் கூட்டமாக இருந்ததால் என்னால் சொல்லமுடியாது. அந்த சாட்சிகள் அதே ஊர்க்காரர்களா வெளியூர்காரர்களா என்று என்னால் தற்போது சொல்ல முடியாது. நான் எழுத்துமூலமாக புகார் கொடுப்பதற்கு முன்பே போலிசார் பிரேதத்தை எடுத்து சென்றுவிட்டார்கள் என்றால் ஆமாம். காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தபிறகு புகாரின் நகலை தாசில்தாருக்கு அனுப்பி வைத்தேன். புகார் கொடுத்தபிறகு தான் இறந்தவரின் ஆடைகளை போலிசார் மகசரில் கைப்பற்றினார்களா என்றால் பிரேதம் அணிந்திருந்த ஆடையுடன்தான் எடுத்துசென்றார்கள். பிரேதத்தை போலிசார் எடுத்துச்சென்றபோது என்னிடம் கையெழுத்து எதுவும் வாங்கவில்லை. நான் புகாரை காவல்நிலையத்தில் வைத்து எழுதவில்லை. என்னுடைய அலுவலகத்தில்வைத்து புகாரை எழுதிவைத்துக் கொடுத்தேன். நான் காவல்நிலையத்தில்வைத்துதான் புகாரை எழுதிக்கொடுத்தேன் என்றும் அலுவலகத்தில் வைத்து எழுதிக்கொடுத்ததாக வழக்குகாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரேதத்தை பார்த்துவிட்டு என் அலுவலகத்திற்கு செல்லும்போது காலை 10.30 மணி இருக்கும். அந்த மணியை நான் புகாரில் குறிப்பிடவில்லை. நான் எத்தனை மணிக்கு அலுவலகத்திற்கு செல்கிறேன் எத்தனை மணிக்கு வருகிறேன் என்பதற்கு பதிவேடு எதுவும் என் அலுவலகத்தில் பராமரிக்கவில்லை. நான் என்னுடைய பணி கிராமத்தில் அசம்பாவிதம் நடந்தாலோ அதிகாரிகள் வந்தாலோதான் பணி கிராமத்திற்கு செல்கிறேன் என்றும் மற்ற நேரத்தில் என் சொந்த வேலையில் இருப்பேன் என்றால் சரியல்ல. கிராம நிர்வாக

அலுவலர் பணிகிராமத்திலேயே இருக்கவேண்டும் என்றஅரசாணை இருக்கிறது என்று சொன்னால் சரிதான். நான் பிரேதத்தை பார்ப்பதற்கு முன்பே போலிசாருக்கு தகவல் தெரிவித்துவிட்டேன். என் உதவியாளர் சொன்னதை வைத்து அந்த தகவலை சொன்னேன் என்றால் சரிதான். என்னுடைய உதவியாளர் எனக்கு தகவல் சொன்னபோது காலை 6.00 மணி இருக்கும். நான் தகவல் தெரிந்ததும் சம்பவ இடம் சென்று பிரேதத்தை பார்த்துவிட்டு பிரேதத்தை பிரேதபரிசோதனைக்கு அனுப்பிவிட்டு அலுவலகத்திற்கு வரும்போது காலை 10.30 மணி இருக்கும். இடைப்பட்ட நேரத்தில் நான் சம்பவ இடத்தில் இருந்தேன். நான் சம்பவ இடம் செல்வதற்கு முன்பே போலிசாருக்கும், வருவாய் ஆய்வாளருக்கும், தாசில்தாருக்கும் போன் மூலம் தகவல் தெரிவித்துவிட்டேன். வருவாய் ஆய்வாளர் பெயர் மதியழகன், தாசில்தார் பெயர் நினைவில் இல்லை, கோட்டாட்சியருக்கு தகவல் தெரிவிக்கவில்லை. சம்பவ தேதியில் நான் வைத்திருந்த செல்போன்தான் தற்போது வைத்திருக்கிறேனா என்றால் இல்லை. அதன்பிறகு 3 செல்போன்கள் மாற்றிவிட்டேன். போலிசுக்கும், வருவாய் ஆய்வாளருக்கும், தாசில்தாருக்கும் நான் எத்தனை மணிக்கு போன் செய்தேன் என்று என்னுடைய செல்போன் அழைப்புபட்டியலை பார்த்தால் தெரியும். பிரேதத்தை பார்த்ததும் காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டேன் என்றும் எல்லா ஆவணங்களும் காவல்நிலையத்திலிருந்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்திற்கு சொல்லுகிற நேரத்தில் போகவில்லை என்றும், சொல்லுகிற நேரத்தில் என்னுடைய அலுவலகத்தில் வைத்து புகார் எழுதினேன் என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-)A. மலர்விழி,
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.